winmeen.com

# முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஜூலை 2022

ஜூலை 01-07

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'CAPSTONE' என்பது கீழ்க்காணும் எந்த விண்வெளி நிறுவனத்தால் ஏவப்பட்ட செயற்கைக்கோளாகும்?**

**அ. NASA ☑**

ஆ. ESA

இ. ஸ்பேஸ்X

ஈ. ரோஸ்கோஸ்மோஸ்

✓ NASA அண்மையில் 25 கிலோகிராம் எடையுள்ள, 'CAPSTONE' என்ற செயற்கைக்கோளை ஏவியுள்ளது. Cislunar Autonomous Positioning System Technology Operations and Navigation Experiment என்பதன் சுருக்கந்தான் CAPSTONE. இந்தச்செயற்கைக்கோள் ஒரு தனித்துவமான மற்றும் நீள்வட்ட நிலா சூழ் – வான்கல வட்டணையைச் சோதிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. CAPSTONE ஆனது நேயர் ரெக்டிலினியர் ஹாலோ ஆர்பிட் (NRHO) எனப்படும் ஒரு நீளமான சுற்றுப்பாதையில் நுழையும். இது NRHO–இல் செயல்படுவது பற்றிய தரவை வழங்கும்.

**2. PSLV–C53 ஏவுதல்மூலம், ISRO, எந்த நாட்டின் 3 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியது?**



அ. நேபாளம்

ஆ. வங்காளதேசம்

**இ. சிங்கப்பூர் ☑**

ஈ. நியூசிலாந்து

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) அதன் முனைய துணைக்கோள் ஏவுகலத்தின்மூலம் (PSLV–C53) சிங்கப்பூரின் மூன்று செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியுள்ளது. இது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது. PSLV–C53 என்பது விண்வெளித் துறையின் நிறுவனப் பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட்டின் (NSIL) இரண்டாவது அர்ப்பணிப்புப் பணியாகும். புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான EOS–04–ஐ கடந்த 2022 பிப்ரவரியில் PSLV–C52 ஏவுகலம்மூலம் ISRO வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

**3. 'தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை' கணினிமயமாக்கலுக்கான செலவு மதிப்பீடு எவ்வளவு?**



அ. ரூ.216 கோடி

**ஆ. ரூ.2516 கோடி ☑**

இ. ரூ.750 கோடி

ஈ. ரூ.7216 கோடி

✓ பொருளாதார விவகாரங்களுக்கான நடுவணமைச்சரவை குழு கூட்டத்தில் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை கணினிமயமாக்க ஒப்புதலளிக்கப்பட்டது. தொடக்க வேளாண் கடன் சங்கங்களின் திறனை அதிகரிப்பதற்கும், அதன் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை கொண்டுவருவதற்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் வர்த்தக நடவடிக்கைகளையும் பல்வேறு சேவைகளையும் மேற்கொள்வதற்கு இது வகைசெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள 63,000 தொடக்க வேளாண் கடன் சங்கங்களை 5 ஆண்டுகளுக்குள் கணினிமயமாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்காக ₹2516 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

✓ இதில் மத்திய அரசின் பங்கு ₹1528 கோடியாகும். இந்தக் கடன் சங்கங்கள்மூலம் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் உள்பட 13 கோடி விவசாயிகள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. 11ஆவது உலக நகர்ப்புற மன்றம் – 2022 நடைபெற்ற இடம் எது?**

அ. ஸ்பெயின்

**ஆ. போலந்து ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரான்ஸ்

✓ 11ஆவது உலக நகர்ப்புற மன்றம் போலந்தில் நடைபெற்றது. நகர்ப்புற விவகாரங்களுக்கான தேசிய நிறுவனம் (NIUA) நகரங்களுக்கான காலநிலை மையம் (NIUA C-Cube), உலக வள நிறுவனம் – இந்தியா (WRI இந்தியா) மற்றும் அவற்றின் பங்காளர்கள் இந்தியாவின் முதல் தேசிய கூட்டமைப்புத் தளமான நகர்ப்புற இயற்கை அடிப்படையிலான தீர்வுகளை (Nature-based Solutions – NbS) தொடங்கினர்.

✓ இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்கான இந்திய மன்றமானது NbS தொழில்முனைவோர், அரசு நிறுவனங்கள் மற்றும் கருத்தொத்த எண்ணங்கொண்ட நிறுவனங்களை கூட்டிணைக்க நோக்கங்கொண்டுள்ளது. அது நகர்ப்புற இயற்கை அடிப்படையிலான தீர்வுகளை வளர்க்க உதவுகிறது.

**5. '2022 – Resilient Democracies' அறிக்கையுடன் தொடர்புடைய உலகளாவிய அமைப்பு எது?**

அ. G20

ஆ. BRICS

**இ. G7 ☑**

ஈ. ASEAN

✓ ஆற்றல்மிகு G7 குழுவின் தலைவர்கள் மற்றும் இந்தியா உட்பட அதன் ஐந்து பங்காளர் நாடுகளின் தலைவர்கள் '2022 Resilient Democracies Statement' என்ற தலைப்பில் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர். குடிமைச் சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதே வேளையில், திறந்த பொது விவாதம் மற்றும் இணையமற்ற மற்றும் இணையமல்லா முறையில் தகவல்களின் இடையீடற்ற ஓட்டம் ஆகியவற்றில் தாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என்று தலைவர்கள் உறுதிப்படுத்தினர்.

**6. கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், இந்தியப் புரட்சியாளர்களின் காட்சியகமான, 'கிராந்தி கதா'வை இந்தியப்பிரதமர் திறந்து வைத்தார்?**




அ. குஜராத்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. பீகார்

ஈ. உத்தரப்பிரதேசம்

✓ மும்பையில் உள்ள ஆளுநர் மாளிகையில் நிலத்தடி பதுங்குக்குழிக்குள் அமைக்கப்பட்ட இந்தியப் புரட்சியாளர்களின் காட்சியகமான, 'கிராந்தி கதா'வை இந்தியப் பிரதமர் மோடி திறந்து வைத்தார். மகாராஷ்டிர ஆளுநரின் புதிய இல்லம் மற்றும் அலுவலகமான 'ஜல் பூஷனை'யும் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

**7. 2022 – உலக குருதிக்கொடையாளர்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



**அ. Blood donation: An act of solidarity. ☑** ஆ. Be brave; Donate Blood.

இ. Helping Hands. ஈ. Blood Donation: Pay Back to the Earth.

✓ உலக குருதிக்கொடையாளர்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.14 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Blood donation: An act of solidarity" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

✓ இரத்தமாற்றத்திற்கு பாதுகாப்பான இரத்தத்தின் தேவையைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தன்னார்வ இரத்ததானம் செய்பவர்களின் முதன்மை பங்களிப்பை முன்னிலைப்படுத்தவும், தேசிய இரத்தமாற்ற சேவைகளை ஆதரிப்பதற்காகவும், இரத்ததானம் செய்யும் நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் போற்றவும் இந்த நாள் உருவாக்கப்பட்டது.

**8. சிறப்பு ASEAN–இந்திய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை (SAIFMM) நடத்திய நாடு எது?**

அ. இந்தோனேசியா ஆ. நியூசிலாந்து

**இ. இந்தியா ☑** ஈ. துருக்கி

✓ ASEAN–இந்தியா ஒத்துழைப்பு அமைப்பின் 30 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் சிறப்பு ASEAN–இந்திய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை (SAIFMM) இந்தியா நடத்தியது. ASEAN வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் பொதுச்செயலாளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இக்கூட்டத்திற்கு வெளியுறவு அமைச்சர் Dr S ஜெய்சங்கர் மற்றும் சிங்கப்பூர் குடியரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் Dr விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

**9. ஆண்டுதோறும், 'உலக கடலாமை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூன்.16 ☑**

ஆ. ஜூன்.26

இ. ஜூன்.30

ஈ. ஜூலை.01



✓ கடல்சார் அமைப்பில் கடலாமைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், இந்நீர்வாழ் உயிரினங்களை அழிவில் இருந்து காப்பாற்றவும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.16ஆம் தேதி 'உலக கடலாமை நாள்' கொண்டாடப்படுகிறது. கடல் ஆமைகள் கடற்புல்மீது மேய்கின்றன; அது கடற்புல் படுக்கைகள் அதிகமாக வளராமல் தடுக்கிறது மற்றும் புதிய வளர்ச்சியைத் தூண்டுகிறது. இந்தியாவில் உள்ள கடலாமைகள் வனவுயிர்கள் (பாதுகாப்பு) சட்டம், 1972–இன்கீழ் பாதுகாக்கப்படுகின்றன; இது பழங்குடி சமூகங்களைத் தவிர மற்ற அனைவரும் ஆமை இறைச்சி மற்றும் அதன் முட்டைகளை உட்கொள்வதை தடைசெய்கிறது.

**10. FIFA U–17 பெண்கள் உலகக்கோப்பை – 2022–ஐ நடத்தும் நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. வங்காளதேசம்

இ. சீனா

ஈ. பிரேசில்

✓ இந்தியா, FIFA 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக்கோப்பை 2022–ஐ நடத்துகிறது; அதன் அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது. புவனேஸ்வரில் உள்ள கலிங்கா அரங்கத்தில் உலகக்கோப்பையின் அனைத்து குழு நிலை ஆட்டங்களையும் இந்தியா விளையாடுகிறது. அக்டோபர்.21 மற்றும் 22 தேதிகளில் நவி மும்பை மற்றும் கோவாவில் காலிறுதிப்போட்டிகள் நடைபெறும். கோவாவில் உள்ள நேரு அரங்கம் மற்றும் நவி மும்பையில் உள்ள D Y பாட்டீல் அரங்கம் அதிகபட்ச போட்டிகளை நடத்தவுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி மின்உற்பத்தி பிரிவு செயல்பாட்டுக்கு வந்தது.**

தெலங்கானாவின் ராமகுண்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 MW மிதக்கும் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையத்தின் கடைசி பகுதியான 20 MW பிரிவின் வணிகரீதியான உற்பத்தி தொடங்கிவிட்டதாக NTPC (தேசிய அனல்மின் கழகம்) அறிவித்துள்ளது. இராமகுண்டம் மிதக்கும் சூரியசக்தி திட்டம், என்டிபிசியால் தொடங்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி திட்டமாகும்.

இந்த நிறுவனத்தின் மொத்த மின்உற்பத்தி திறன் 69,134.20 MW ஆகும். இதில் 23 நிலக்கரியையும், 7 எரிவாயுவையும் அடிப்படையாக கொண்டவை. ஒன்று நீர்மின் திட்டமாகும். 19 புதுபிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் ஆகும். கூட்டுமுயற்சியின்கீழ் என்டிபிசி, நிலக்கரி அடிப்படையிலான 9 மின்னுற்பத்தி நிலையங்களையும், 4 எரிவாயு, 8 நீர்மின் திட்டங்கள் மற்றும் 5 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை கொண்டுள்ளது.

---

**2. மகாராஷ்டிர முதல்வராக பதவியேற்றார் ஏக்நாத் ஷிண்டே**

மகாராஷ்டிர மாநிலத்தில், முதல்வராக இருந்த உத்தவ் தாக்கரே தனது பதவியை இராஜினாமா செய்தநிலையில், மீண்டும் சிவசேனை ஆட்சி அமையவிருக்கிறது. இந்த அரசுக்கு பாஜக ஆதரவளிக்கும் என்று அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து, ஆளுநர் பகத்சிங் கோஷியாரியை சந்தித்த பாஜக மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிசும், சிவசேனை தலைவர் ஏக்நாத் ஷிண்டேவும் மகாராஷ்டிரத்தில் ஆட்சியமைக்க உரிமைகோரினர். இந்நிலையில் மகாராஷ்டிர மாநில முதல்வராக ஏக்நாத் ஷிண்டே வியாழக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் கோஷியாரி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அவரைத் தொடர்ந்து பாஜக தலைவரான தேவேந்திர பட்னாவிஸ் துணை முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

---

**3. சிறு, குறு, நடுத்தர தொழிலில் முதலிடம்: விருதுநகர் மாவட்டத்துக்கு தேசிய விருது**

இந்திய அளவில் முன்னேற விழையும் மாவட்டங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிலில் சிறப்பாக செயல்பட்டதற்காக விருதுநகர் மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

நடுவணரசின் NITI ஆயோக் அமைப்பினர் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலுள்ள மாவட்டங்களை ஆய்வுசெய்தனர். அதில், 112 பின்தங்கிய மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக தேர்வுசெய்யப்பட்டன. இதில் தமிழ்நாட்டில் இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களும் அடங்கும். சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை, நீர்வள ஆதாரம் போன்ற உள்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்தி தொழில் வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை தேவைகளை உருவாக்குவது மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டுசெல்வது இதன் முக்கிய நோக்கமாகும். இந்நிலையில், சிறு, குறு, நடுத்தர நிறுவன உற்பத்தியில் சிறப்பாக செயல்பட்டதற்காக நிகழாண்டு தேசிய விருதுக்கு விருதுநகர் மாவட்டம் முதலிடத்தை பிடித்து தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

---

**4. 2035–இல் இந்திய நகர்ப்புற மக்கள் தொகை 67 கோடி: ஐநா அறிக்கையில் தகவல்**

வரும் 2035–ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் நகர்ப்புற மக்கள் தொகை 67.5 கோடியை எட்டும் என ஐநா.வின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வரும் 2035–க்குள் நகர்ப்புற மக்கள்தொகையில் 100 கோடி பங்களிப்புடன் சீனா முதலிடத்தில் இருக்கும். இதற்கு, அடுத்தபடியாக, இந்தியா 67.5 கோடி மக்கள் தொகையுடன் பட்டியலில் இரண்டாமிடம் வகிக்கும். விரைவான நகரமயமாக்கல் என்பது கரோனா பேரிடரால் தற்காலிகமாக தாமதப்படுத்தப்பட்டுள்ளது. வரும் 2050–ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய நகா்ப்புற மக்கள்தொகை மேலும் 220 கோடி அதிகரிக்கும்.

2020ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 483,099,000–ஆக இருந்த இந்தியாவின் நகர்ப்புற மக்கள்தொகை 2025இல் 542,743,000–ஆகவும், 2030–இல் 607,342,000–ஆகவும், 2035–இல் 675,456,000 ஆகவும் அதிகரிக்கும். அதேபோன்று, 2035–இல் நகர்ப்புற மக்கள்தொகை சீனாவில் 105 கோடியாகவும், ஆசியாவில் 299 கோடியாகவும், தெற்காசியாவில் 98.75 கோடியாகவும் இருக்கும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. 5 ஆண்டுகளை நிறைவு செய்தது GST!**

நாட்டின் மறைமுக வரி விதிப்பில் மிகப்பெரிய மாற்றமாக அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு–சேவை வரி (GST) 5 ஆண்டுகளை நிறைவுசெய்து 6–ஆவது ஆண்டில் அடியெடுத்துவைத்துள்ளது.

மத்திய, மாநில அரசுகளால் விதிக்கப்பட்டு வந்த கலால் வரி, சேவை வரி, மதிப்பு கூட்டு வரி (வாட்) உள்ளிட்ட 17 மறைமுக வரிகளை ஒருங்கிணைத்து சரக்கு–சேவை வரி திட்டத்தை மத்திய அரசு 2017–ஆம் ஆண்டு ஜூலை 1–ஆம் தேதி அறிமுகப்படுத்தியது. புதிய விதிகளின்படி, பொருள்களுக்கும் சேவைகளுக்கும் 5%, 12%, 18%, 28% என 4 விகிதங்களில் GST விதிக்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட பலவற்றுக்கு வரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. தங்கம், வைரம் உள்ளிட்ட ஆபரணங்களுக்கு 3%, 1.5% என சிறப்பு வரிகள் விதிக்கப்படுகின்றன. இவை மட்டுமின்றி 28 சதவீத வரி விதிக்கப்படும் ஆடம்பரப் பொருள்கள் மீது கூடுதலாக செஸ் வரி விதிக்கப்படுகிறது.

GST காரணமாகப் பல்வேறு பொருள்களின் விலை குறைந்தது. GST அறிமுகத்துக்கு முன் மத்திய, மாநில அரசுகள் விதிக்கும் மறைமுக வரி சராசரியாக 31% வரை இருந்தது. GST அமலாக்கத்தால் வரி பெருமளவில் குறைந்தது. ஆனால், அதன் பலன்கள் மக்களுக்குக் கிடைக்காத வகையில் பல நிறுவனங்கள் பொருள்களைப் பழைய விலைக்கே விற்கும் நோக்கில், அவற்றின் மீதான அடிப்படை விலையை உயர்த்தின. அதன் காரணமாக GST அமலாக்கம் விட நிறுவனங்களுக்கு அதிக பலனைத் தந்ததாகப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

**கரோனாவின் தாக்கமும் மீட்சியும்**

GST வாயிலான மாதாந்திர வருவாய் அதிகரிக்கத் தொடங்கியபோது, நாட்டில் கரோனா தொற்று பரவியது. அதையடுத்து அமல்படுத்தப்பட்ட பொது முடக்கம், நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிய அளவில் பாதித்தது. அது GST வருவாயிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சுமார் ஓராண்டுக்கு வருவாய் குறைவாகவே இருந்தநிலையில், 2021 மத்தியில் இருந்து நாட்டின் பொருளாதாரம் மீண்டும் மீளத்தொடங்கியது. இது GST வருவாயிலும் எதிரொலித்தது. மாதாந்திர GST வருவாய் தொடர்ந்து ₹1 லட்சம் கோடியைக் கடந்த நிலையில், அதிகபட்சமாகக் கடந்த ஏப்ரலில் ₹1.68 லட்சம் கோடியை எட்டியது. தற்போதைய நிலையில், மாதாந்திர GST வருவாய் சராசரியாக ₹1.4 லட்சம் கோடியாக இருந்து வருகிறது.

**தொழில்நுட்ப சேவைகள்**

தொழில் நிறுவனங்களும் தனி நபர்களும் GST செலுத்துவதை எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைத் தடுக்கவும் மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**பெட்ரோல், டீசல் விலக்கு**

பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் ஆகியவற்றை GST வரம்புக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்குத் தொடர்ந்து முட்டுக்கட்டை நிலவி வருகிறது. அவற்றை GST வரம்புக்குள் கொண்டுவந்தால், தங்களுக்கான வருவாய் மேலும் குறையும் எனப் பல மாநில அரசுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. GST இழப்பீடு வழங்கும் நடைமுறை நிறைவடைந்துள்ள நிலையில், அதை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டுமெனப் பல மாநிலங்கள் கோரி வருகின்றன. அதே வேளையில், எரிபொருள்களையும் GST வரம்புக்குள் கொண்டுவந்து, வரி வசூல் நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்தினால் வருவாய் கூடுதலாக அதிகரித்து நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவும் எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

---

**1. உத்தவ் தாக்கரே பதவி விலகிய பிறகு, மகாராஷ்டிராவின் புதிய முதலமைச்சராக பதவியேற்றவர் யார்?**

அ. தேவேந்திர பட்னாவிஸ்

**ஆ. ஏக்நாத் ஷிண்டே ☑**

இ. சுனில் பிரபு

ஈ. சரத் பவார்



✓ மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சராக சிவசேனை கட்சியின் தலைவர் ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதல் அமைச்சராக பாஜக தலைவர் தேவேந்திர பட்னாவிசும் பதவியேற்றனர். மகாராஷ்டிர ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி அவர்களுக்கு பதவிப்பிரமாணமும், இரகசியக்காப்புப்பிரமாணமும் செய்து வைத்தார். இதற்கு முன்னதாக உட்கட்சிப் பூசலால் முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே பதவி விலகினார்.

**2. 'PSLV Orbital Experimental Module (POEM)' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ. DRDO

**ஆ. ISRO ☑**

இ. HAL

ஈ. BHEL

✓ PSLV Orbital Experimental Module (POEM) என்பது ISROஇன் முனைய செயற்கைக்கோள் ஏவுகலத்தின் (PSLV) இறுதிக்கட்டத்தைப் பயன்படுத்தி சுற்றுப்பாதையில் சோதனைகளைச் செய்யப் பயன்படும் ஒரு பணித்தளமாகும். PSLV ஏவுகலத்தில், முதல் 3 நிலைகள் மீண்டும் கடலில் விழும் மற்றும் இறுதி நிலை (PS4) செயற்கைக்கோளை சுற்றுப்பாதையில் செலுத்திய பிறகு, விண்வெளிக்குப்பையாக நிறைவுறும். POEM ஆனது அணுகுமுறை நிலைப்படு–த்தலுக்கான வழிசெலுத்தல் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பைக் கொண்டுள்ளது.

**3. இந்தியாவில், 'தேர்தல் பத்திரங்களை' வெளியிடும் ஒரே நிறுவனம் எது?**

அ. RBI

**ஆ. SBI ☑**

இ. NITI ஆயோக்

ஈ. CBDT

✓ ஜூலை.1 முதல் அங்கீகரிக்கப்பட்ட SBI கிளைகள்மூலம் 21ஆவது கட்ட தேர்தல் பத்திரங்களை விற்பனை செய்ய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. பாரதி வங்கி (SBI) மட்டுமே அதன் 29 அங்கீகரிக்கப்பட்ட கிளைகள்மூலம் தேர்தல் பத்திரங்களை வெளியிடுவதற்கும் பணமாக்குவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனமாக உள்ளது. தேர்தல் பத்திரங்கள் வட்டியில்லாதவையாயகும்; அவை 15 நாட்களுக்குள் வங்கிக்கணக்குமூலம் கட்சியால் நிதியாக்கப்படும்.

**4. 2022 ஜூலையில், கீழ்க்காணும் எந்நிறுவனத்தை, 'சர்வதேச அமைப்பாக' வகைப்படுத்த நடுவணமைச்சரவை ஒப்புதலளித்தது?**

அ. பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி

ஆ. BIMSTEC

**இ. பேரிடர் தாங்கக்கூடிய உட்கட்டமைப்புக்கான கூட்டணி ☑**

ஈ. ஒரே சூரியன் ஒரே உலகம் ஒரே மின் கட்டமைப்பு

- ✓ பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான கூட்டணியை (CDRI) 'சர்வதேச அமைப்பாக' வகைப்படுத்துவதற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது. 1947ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் (சலுகைகள் மற்றும் தடைகள்) சட்டத்தின் பிரிவு–3இன்கீழ் விதிவிலக்குகள் மற்றும் சலுகைகளை வழங்குவதற்காக, CDRI உடனான தலைமையக ஒப்பந்தத் –தில் கையெழுத்திடவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**5. 'தானியங்கி பறக்கும் பிரிவு தொழில்நுட்ப செயல்விளக்க விமானத்தை' சோதனை செய்த இந்திய அமைப்பு எது?**

**அ. DRDO ☑**

ஆ. NSIL

இ. துருவா ஸ்பேஸ்

ஈ. பிக்ஸ்ஸல் ஸ்பேஸ்

- ✓ தானியங்கி பறக்கும் பிரிவு தொழில்நுட்ப செயல்விளக்க விமானத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) கர்நாடக மாநிலத்தின் சித்ரதுர்காவில் உள்ள வான்சோதனை தளத்தில் முதல்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. முற்றிலும் தானியங்கி முறையில் இயங்கக்கூடிய இந்த விமானத்தின் புறப்பாடு, பறக்கும் வழி, தரையிறங்குதல் உள்ளிட்ட அனைத்து பரிசோதனைகளும் துல்லியமாக அமைந்தது. வருங்காலத்தில் தயாரிக்கப்படும் ஆளில்லா விமானங்களுக்கான முக்கிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தச் சோதனை ஒட்டம் மாபெரும் சாதனை எனக் கருதப்படுகிறது.

**6. 1995–இல் 'Internet Explorer' உலாவியை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. ஆப்பிள்

ஆ. IBM

**இ. மைக்ரோசாப்ட் ☑**

ஈ. யாஹூ

- ✓ மைக்ரோசாப்ட் 27 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் தனித்துவமான இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் உலாவி சேவையை நிறுத்தியது. இது 1995ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பழைமையான உலாவிகளில் ஒன்றாகும். மைக்ரோசாப்ட் அதன் பயனர்களை அதன் நவீன 'எட்ஜ்' உலாவிக்கு மாறுமாறு கேட்டுக்கொண்டுள்ளது, அதே வேளையில் பழைய உலாவியின் மெய்நிகர் பதிப்பு பயனர்களுக்குக் கிடைக்கும் எனவும் அது தெரிவித்துள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டில், 'குரோம்' ஆனது 70%–க்கும் அதிகமான சந்தைப்பங்கைக்கொண்ட உலகின் மிகவும் பிரபலமான மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் உலாவியாக மாறி தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

**7. 2022 – பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Reduced Harmful Activities.

**ஆ. Rising up from Drought Together. ☑**

இ. Healthy Soil; Healthy Earth.

ஈ. Degradation to Restoration.




- ✓ பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.17 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. பாலைவனமாக்குதலை எதிர்த்து சீரழிந்த நிலத்தை நலமிகு அல்லது வளமிகு மண்ணாக மாற்றுவதில் இந்த நாள் கவனஞ்செலுத்துகிறது. பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்த்துப்போராடுவதற்கான உலக நாளின் (2022) கருப்பொருள் – "Rising up from Drought Together.

**8. இந்திய பிரஸ் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் ☑**

ஆ. நீதிபதி அஜய் குமார் சிக்ரி

இ. நீதிபதி சதாசிவம்

ஈ. நீதிபதி Y சந்திரசூட்



✓ இந்திய பிரஸ் கவுன்சிலின் தலைவராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 2021 நவம்பரில் பதவியைவிட்டு வெளியேறிய ஓய்வுபெற்ற நீதிபதி சி கே பிரசாத்துக்குப் பதிலாக அவர் நியமிக்கப்பட்டார். நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஜம்மு–காஷ்மீர் எல்லை நிர்ணய ஆணையத்தின் தலைவராகவும், மகாராஷ்டிர மாநில அரசின் வழக்கறிஞராகவும், பம்பாய் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் இதற்கு முன் பணியாற்றியுள்ளார்.

**9. ஆண்டுதோறும், உலக அரிவாள் செல் சோகை நோய் குறித்த விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூன்.19 ☑**

ஆ. ஜூன்.23

இ. ஜூன்.30

ஈ. ஜூலை.03




✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.19 அன்று, அரிவாள் செல் சோகை நோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஐநா பொதுச் சபையால் உலக அரிவாள் செல் சோகை நோய் குறித்த விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அரிவாள் செல் சோகை என்பது மரபுவழி கோளாற்றால் ஏற்படும் ஒரு நோயாகும். இந்நோயினால் சிவப்பு இரத்த அணுக்கள் தந்து சாதாரண இருகவிழ் வடிவிற்கு பதிலாக அரிவாள் வடிவமாக மாறும்.

**10. குஸ்டாவோ பெட்ரோ என்பார் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அதிபராவார்?**

அ. பிரான்ஸ்

**ஆ. கொலம்பியா ☑**

இ. தாய்லாந்து

ஈ. வட கொரியா



✓ கொலம்பியாவின் அதிபர் தேர்தலில் முன்னாள் கிளர்ச்சியாளர் குஸ்டாவோ பெட்ரோ பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நாட்டின் முதல் இடதுசாரி அதிபராக பதவியேற்கவுள்ளார். கடந்த ஆண்டு பெருவில் பெற்ற வெற்றிகள் மற்றும் இந்த ஆண்டு சிலி மற்றும் ஹோண்டுராஸ் வெற்றிகள்மூலம் தென்னமெரிக்க அரசியல் இடதுசாரி அரசியல் பக்கம் சென்றுள்ளது. தொற்றுநோய்காலத்தின்போது ஊழல், தேக்கநிலை, அதிகரித்த வரிவிதிப்பு மற்றும் புதிய சுகாதார சீர்திருத்தத்திற்கு எதிராக அரசிற்கு எதிரான போராட்டங்களை கொலம்பியா கண்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவுக்கு ₹13,834 கோடி கடன்: உலக வங்கி ஒப்புதல்**

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மற்றும் தனியார் முதலீட்டுக்காக இந்தியாவுக்கு $1.75 பில்லியன் டாலர் (சுமார் ₹13,834 கோடி) கடனளிக்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக உலக வங்கி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சுகாதாரத்துக்கு $1 பில்லியன் டாலர், தனியார் முதலீட்டுக்கு $750 மில்லியன் டாலர் என இந்தியாவுக்கு $1.75 பில்லியன் டாலர் கடனளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் சுகாதாரத்துக்கு அளிக்கப்படும் கடன், பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் உட்கட்டமைப்பு திட்டத்துக்கு உதவும். இந்தியாவில் உள்ள பொது சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்த இந்தக் கடன் தொகை பயன்படுத்தப்படும்.

சுகாதாரத்துக்கான 1 பில்லியன் டாலரில் 500 மில்லியன் டாலர்மூலம் தமிழ்நாடு, கேரளம், ஆந்திர பிரதேசம், ஒடிஸா, உத்தர பிரதேசம், பஞ்சாப், மேகாலயம் ஆகிய ஏழு மாநிலங்கள் பலனடைய முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. ஜூன் மாத GST வருவாய் ₹1.44 இலட்சம் கோடி**

2022 ஜூன் மாதத்தில் சரக்குகள்–சேவைகள் வரி (GST) வருவாய் ₹1,44,616 கோடியாக இருந்ததென நடுவண் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு ஜூன் மாத வருவாயுடன் (₹92,800 கோடி) ஒப்பிடுகையில் 56 சதவீத அதிகரிப்பாகும். GST மாதாந்திர வருவாய் ₹1.4 இலட்சம் கோடியைக் கடப்பது இது 5–ஆவது முறையாகும். முக்கியமாக, கடந்த மார்ச்சில் இருந்து தொடர்ந்து 4 மாதங்களாக GST வருவாய் ₹1.4 இலட்சம் கோடிக்கு அதிகமாகவே உள்ளது.

வரலாற்றிலேயே அதிகபட்சமாக கடந்த ஏப்ரலில் GST வருவாய் ₹1.68 இலட்சம் கோடியாக இருந்தது. ஜூன் மாத வருவாயான ₹1.44 இலட்சம் கோடியானது இரண்டாவது அதிகபட்சமாகும். அதில் நடுவண் சரக்கு–சேவை வரியாக (CGST) ₹25,306 கோடியும், மாநில சரக்கு–சேவை வரியாக (SGST) ₹32,406 கோடியும், ஒருங்கிணைந்த சரக்கு–சேவை வரியாக (IGST) ₹75,887 கோடியும் வசூலாகியுள்ளது. செஸ் வரியாக ₹11,018 கோடி வருவாய் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு ஜூனுடன் ஒப்பிடுகையில், கடந்த மாதத்தில் பொருள்கள் இறக்குமதி வாயிலான வருவாய் 55 சதவீதமும், உள்நாட்டு பணப்பரிவர்த்தனை வாயிலான வருவாய் 56 சதவீதமும் அதிகரித்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021–22 நிதியாண்டின் முதல் காலாண்டில் சராசரி GST வருவாயானது ₹1.10 இலட்சம் கோடியாக இருந்த நிலையில், நடப்பு 2022–23 நிதியாண்டின் முதல் காலாண்டில் சராசரி வருவாய் ₹1.51 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாட்டின் பொருளாதார மீட்சி, வரி ஏய்ப்பில் ஈடுபடுவோர்மீது நடவடிக்கை உள்ளிட்டவை காரணமாக GST வருவாய் அதிகரித்துள்ளதாகவும் நடுவண் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**நடப்பாண்டில் GST வருவாய்**

ஜனவரி – ₹1.40 இலட்சம் கோடி

பிப்ரவரி – ₹1.33 இலட்சம் கோடி

மார்ச் – ₹1.42 இலட்சம் கோடி

ஏப்ரல் – ₹1.68 இலட்சம் கோடி

மே – ₹1.41 இலட்சம் கோடி

ஜூன் – ₹1.44 இலட்சம் கோடி

---

**3. தங்கம் இறக்குமதி மீதான வரி 15%–ஆக அதிகரிப்பு**

நடப்பு கணக்கு பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் வகையில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை 15 சதவீதமாக அதிகரிப்பதாக மத்திய அரசு தெரிவித்தது. இதுகுறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மேலும் கூறியது:

இந்தியா அதிக அளவில் தங்கத்தை உற்பத்தி செய்வது கிடையாது. எனவே, தங்கத்தின் இறக்குமதி நாட்டின் செலாவணி கையிருப்பில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

தங்கத்தின் தேவை மாற்றமில்லாமல் உள்ளது. எனவே, அதனை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது இறக்குமதி செய்ய விரும்பினால் அதற்கு அதிக விலை கொடுக்கவேண்டும். இதன்மூலம் நாட்டுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு வருவாய் கிடைக்கும். அதிகரித்துவரும் நடப்பு கணக்கு பற்றாக்குறை இடைவெளியை கட்டுப்படுத்தும் வகையில் தங்கம் இறக்குமதி மீதான வரி 10.75 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. இந்த வரி விகித மாற்றம் ஜூன் 30–லிருந்து அமல்படுத்தப்படுகிறது என்றார் அவர். கடந்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீதமாக இருந்த நடப்பு கணக்கு பற்றாக்குறை நிகழ் 2022–23–ஆம் நிதியாண்டில் 3 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4. ₹25,600 கோடியில் செமிகண்டக்டர் உயர் தொழில்நுட்பப்பூங்கா: தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாட்டில் ₹25,600 கோடியில் செமிகண்டக்டர் உயர்தொழில்நுட்பப்பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசுக்கும், சிங்கப்பூரின் IGSSV கூட்டாண்மை நிறுவனத்துக்கும் இடையே கையொப்பமானது. இந்த நிறுவனமானது, அடுத்த 5 ஆண்டுகளில் செமிகண்டக்டர் உயர்தொழில்நுட்பப் பூங்காவுக்கான திட்டத்தில் ₹25,600 கோடி முதலீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் 1,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். IGSSV நிறுவனமானது, 'புராஜெக்ட் சூரியா' என்ற பெயரில் செமிகண்டக்டர் தொழில்நுட்பத் திட்டத்தை நிறுவவுள்ளது.

---

**5. மாநில அணை பாதுகாப்பு அமைப்பு உருவாக்கம்: தமிழ்நாடு அரசு உத்தரவு**

அணை பாதுகாப்புச் சட்டம் 2021–இன்படி, மாநில அணை பாதுகாப்பு அமைப்பை உருவாக்கி தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

இதுதொடர்பாக தமிழ்நாட்டு அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை:

நடுவண் அணை பாதுகாப்புச் சட்டத்தின் 11–ஆவது பிரிவின்படி, மாநில அணை பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதன்படி, மாநில அணை பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இந்த அமைப்பின் தலைவராக தலைமைப்பொறியாளர் (பொது) இருப்பார். உறுப்பினர்களாக, நீர்வளத்துறை தலைமைப்பொறியாளர், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மண்டல நீர்வளத் துறை தலைமைப்பொறியாளர்கள், மின்வாரிய தலைமைப் பொறியாளர் (நீர்மின் சக்தி), மத்திய எரிசக்தி ஆணையத்தின் தலைமைப் பொறியாளர், மேல் பவானி அணைகளின் தலைமைப் பொறியாளர், வீடூர் அணையின் தலைமைப் பொறியாளர், சென்னை ஐஐடி இயக்குநர் (அணை வடிவமைப்பு), அண்ணா பல்கலைக்கழக நீர்வளமையப்பிரிவின் இயக்குநர், திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் அணை வடிவமைப்புப் பிரிவு இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

---

**6. கரோனாவுக்கு ஆயுஷ் சிகிச்சை முறை தொகுப்பு: NITI ஆயோக் வெளியீடு**

கரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தல் மற்றும் மேலாண்மையில் ஆயுஷ் அடிப்படையிலான சிகிச்சை முறையில் நாடு முழுக்க பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பின்பற்றப்பட்டு தீர்வுகாணப்பட்ட 'கரோனா நோய்த்தொற்று மேலாண்மை: ஆயுஷ் சிகிச்சை முறை' தொகுப்பை NITI ஆயோக் வெளியிட்டது.

ஆயுர்வேதம், யோகா, மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவங்கள் ஒருங்கிணைத்திருப்பது ஆயுஷ் அடிப்படை சிகிச்சை.

தமிழ்நாட்டில் COVID நோய்த்தொற்றுக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்ட கபசுர குடிநீர், நிலவேம்பு குடிநீர் போன்றவை மூலம் நோய்த்தடுப்பு முறைகள் சிறப்பாக செயல்பட்டதுபற்றி தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றுகள் அடிப்படையிலான ஆயுஷ் சேவைகளை நவீன முறையுடன் ஒருங்கிணைப்பது இந்தியாவின் சுகாதார அமைப்பை கணிசமாக வலுப்படுத்தும் எனவும் NITI ஆயோக் வெளியிட்ட இந்தத் தொகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. வங்கிகள் வாரிய பணியகத்திற்கு மாற்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய அமைப்பு எது?**

அ. நிதியியல் சேவைகள் நிறுவன பணியகம் (FSIB) ☑

ஆ. நிதி நிறுவனங்கள் பணியகம் (FIB)

இ. வங்கிகள் நியமன பணியகம் (BAB)

ஈ. வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் பணியகம்




✓ வங்கிகள் வாரிய பணியகத்திற்கு (BBB) மாற்றாக நிதியியல் சேவைகள் நிறுவன பணியகத்தை (FSIB) அமைக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. மூத்த நிர்வாக நிலை பதவிகளுக்கான நியமனங்களுக்கான விண்ணப்பதாரர்க–ளைத் தேர்ந்தெடுக்கும் பணி BBB–இடம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்கம் நடத்தும் பொதுக் காப்பீட்டு நிறுவனங்க–ளுக்கான பொது மேலாளர்கள் மற்றும் இயக்குநர்களை BBB–ஆல் தேர்வு செய்ய முடியாது என்று தில்லி உயர் நீதிமன்றம் கடந்த ஆண்டு தீர்ப்பளித்தது. BBB–இன் முன்னாள் தலைவர் சர்மா இந்தப் புதிய அமைப்புக்கு தலைமை தாங்கவுள்ளார்.

**2. 'நாரி கோ நமன்' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய மாநிலம் எது?**

அ. உத்தரப்பிரதேசம்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. பஞ்சாப்

ஈ. ஒடிஸா



✓ ஹிமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர், 'நாரி கோ நமன்' என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். இது மாநிலத்திற்குள் பயணஞ்செய்ய பெண்களுக்கு பேருந்துக்கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. பெண் பயணிகள் மற்றும் மூத்த குடிமக்களை அழைத்துச்செல்லும் முயற்சியான 'ரைட் வித் பிரைட்' அரசு வாடகையுந்து சேவையில் 25 புதிய பெண் ஓட்டுனர் பணியிடங்களை அனுமதிப்பதாகவும் அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.

**3. நிதிசார் நடவடிக்கைகளுக்கான செயற்குழுவின் (FATF) புதிய தலைவர் யார்?**

அ. T இராஜா குமார் ☑

ஆ. உர்ஜித் படேல்

இ. வைரல் ஆச்சார்யா

ஈ. சுபாஷ் சந்திர கார்க்

✓ பணமோசடி தடுப்பு கண்காணிப்பு அமைப்பான Financial Action Task Force (FATF) தலைவராக சிங்கப்பூரைச் சேர்ந்த T ராஜா குமார் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மார்கஸ் பிளேயருக்குப் பதிலாக அடுத்த ஈராண்டுகளுக்கு இந்தப் பதவியிலிருப்பார். FATF–இன் கூற்றுப்படி, உலகளாவிய பணமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதி நடவடிக்கைகள், சொத்து மீட்பு மற்றும் பிற முயற்சிகளின் செயல்திறனை மேம்படுத்துவதில் தலைவர் தனது கவனத்தைச் செலுத்துவார்.

**4. 2022 ஜூனில் ஈட்டப்பட்ட மொத்த GST வரி வருவாய் எவ்வளவு?**

அ. ரூ. 1.45 இலட்சம் கோடி ☑

ஆ. ரூ. 1.30 இலட்சம் கோடி

இ. ரூ. 1.20 இலட்சம் கோடி

ஈ. ரூ. 1.15 இலட்சம் கோடி



✓ 2022 ஜூன் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) வருவாய் ₹144,616 கோடியாக உயர்ந்துள்ளது; கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு GST அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இரண்டாவது முறையாக அதிகபட்சமாக வரி வருவாய் பெறப்பட்டுள்ளது. இந்தப் புதிய அதிகபட்ச வரிவசூல் விரைவான பொருளாதார மீட்சியைக் காண்பிப்பதாக நடுவண் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில், இதுவரை இல்லாத அளவுக்கு ₹1,67,540 கோடி வசூலானது. 2022 மார்ச்சுக்குப்பிறகு, ஐந்தாவது முறையாக மாதாந்திர GST வசூல் ₹1.40 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

**5. 'SDG National Indicator Framework (NIF) முன்னேற்ற அறிக்கை, 2022'ஐ வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?**

அ. நிதி அமைச்சகம்

**ஆ. புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

✓ இந்தியா ஜூன்.29ஆம் தேதியை, 'தேசிய புள்ளியல் நாள்' எனக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு, "Data for Sustainable Development" என்பது கருப்பொருளாக இருந்தது. அமைச்சகம் 'நீடித்த வளர்ச்சி இலக்குகள்–தேசிய சுட்டி கட்டமைப்பு (NIF) முன்னேற்ற அறிக்கை, 2022'ஐ வெளியிட்டது. இவ்வறிக்கையுடன், புதுப்பிக்கப்பட்ட NIF–2022 மற்றும் SDGஇன் NIF அறிக்கை – 2022 மற்றும் "Youth in India–2022" வெளியீடு ஆகியவையும் வெளியிடப்பட்டன.

**6. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, எந்தத் தேதியிலிருந்து 'ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழி'ப் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது?**

அ. 2022 ஏப்ரல்.01

**ஆ. 2022 ஜூலை.01 ☑**

இ. 2023 ஜனவரி.01

ஈ. 2023 ஏப்ரல்.01



✓ 2022 ஜூலை.01 முதல் தடைசெய்யப்படும் பொருட்களின் பட்டியலை சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வரையறுத்துள்ளது. கடந்த ஆண்டு இதற்கான தடை அறிவிப்பு வெளியானது. இந்த அறிவிப்பின்படி, பாலிஸ்டிரீன் மற்றும் விரிவாக்கப்பட்ட பாலிஸ்டிரீன் உட்பட அனைத்து ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிகளின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவை 2022 ஜூலை.01 முதல் தடைசெய்யப்படும்.

**7. 'நூரி' எண்ணும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் விண்வெளி ஏவுகணையை ஏவிய நாடு எது?**

**அ. தென் கொரியா ☑**

ஆ. ஈரான்

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. இஸ்ரேல்



✓ தென் கொரியா தனது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணையான 'நூரி'யை அண்மையில் ஏவியது. இந்த ஏவுதல் வெற்றிபெற்றால், சொந்த தொழில்நுட்பத்துடன் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் உலகின் 10ஆம் நாடாக தென் கொரியா மாறும். செயல்திறன் சரிபார்ப்பு செயற்கைக்கோளான இது தென் கொரியாவுக்கு மேலும் பல செயற்கைக்கோள்களை ஏவுதற்கு உதவும்.

**8. மிகப்பெரிய தங்க மறுசுழற்சியாளர்கள் குறித்த உலக தங்க கவுன்சிலின் அறிக்கையில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. முதலாவது ஆ. இரண்டாவது

இ. மூன்றாவது **ஈ. நான்காவது ☑**

✓ 'தங்க சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி' என்ற தலைப்பிலான உலக தங்க கவுன்சிலின் அறிக்கையின்படி, தங்கத்தை மிகப்பெரிய அளவுக்கு மறுசுழற்சி செய்யும் உலகின் நான்காவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டில் இந்தியா 75 டன் தங்கத்தை மறுசுழற்சி செய்துள்ளது. அதே வேளையில் சீனா 168 டன்களை மறுசுழற்சி செய்து தரவரிசையில் முதலிடத்திலும், இத்தாலி 80 டன்களுடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா 78 டன்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.


**9. 'Whoever, whatever, whenever. Everyone has a right to seek safety' என்பது கீழ்க்காணும் எந்தச் சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும்?**

**அ. உலக அகதிகள் நாள் ☑**

ஆ. உலக மண் நாள்

இ. உலக ஐநா அமைதிப்படை தினம்

ஈ. உலக வளி நாள்




✓ ஒவ்வோர் ஆண்டும், தங்கள் வாழ்விடங்களிலிருந்து புலம்பெயர்ந்த அகதிகள் எதிர்கொள்ளும் சிக்கல் / சிரமங்களை முன்னிலைப்படுத்த, ஜூன்.20 அன்று உலக அகதிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. ஐநா அவை 2001ஆம் ஆண்டு முதல் இந்நாளைக் கடைப்பிடித்து வருகிறது. 1951ஆம் ஆண்டு அகதிகள் தீர்மானத்தின் ஐம்பதாமாண்டு நிறைவை இது குறிக்கிறது. "Whoever, whatever, whenever. Everyone has a right to seek safety" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் உலக அகதிகள் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**10. மூளை ஆராய்ச்சி மையத்தை பிரதமர் மோடி அவர்கள் பின்வரும் எந்த மாநிலம்/UTஇல் திறந்து வைத்தார்?**

**அ. கர்நாடகா ☑**

ஆ. குஜராத்

இ. தெலுங்கானா

ஈ. கேரளா



✓ பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழக (IISc) வளாகத்தில் மூளை ஆராய்ச்சி மையத்தை (CBR) பிரதமர் மோடி திறந்து வைத்தார். ₹280 கோடி செலவில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மூளை ஆராய்ச்சி மையம் ஆராய்ச்சிக்கான வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளதுடன் வயது மூப்பினருக்கான மூளை சம்பந்தமான நோய்களை களைவதற்கு ஆராய்ச்சிகளில் கவனஞ்செலுத்தவுள்ளது. நாட்டில் மருத்துவ ஆராய்ச்சியில் மிகப்பெரிய பங்களிப்பை இது அளித்திடும். புதிய கண்டுபிடிப்புகளுடனான தீர்வுகளுடன் நாட்டில் சுகாதார சேவைகள் மேம்பட இந்தச் சிறப்பு மையம் உதவும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 75 ஆயிரம் வேலை; 60 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்: ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து**

தமிழ்நாட்டில் சுமார் 75,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில், 60 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" முதலீட்டாளர்கள் மாநாட்டில் ₹1,25,244 கோடி முதலீட்டில் 74,898 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில் 60 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அது மட்டுமல்லாமல், ₹1,497 கோடி முதலீட்டில் 7,050 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 12 திட்டங்களுக்கான வணிக உற்பத்தியை தொடங்கிவைத்து, ₹22,252 கோடி முதலீட்டில் 17,654 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 21 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

**TNTecxperience தொடக்கம்**

மாநிலத்தில் நிதித்தொழில்நுட்பங்கள் பரவலாக பின்பற்றப்படுவதை அதிகரிக்கும் வகையில், டிஎன்டெக்ஸ்பீரியன்ஸ் (TNTecxperience) திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார். இத்திட்டம் மூலம் தனிநபர்கள் / புத்தொழில் நிறுவனங்கள் / குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதித்தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை மேலும் மேம்படுத்தும் வகையில், நிதி நுட்ப சேவைகளை இலவசமாகவோ அல்லது சில காலத்திற்கு குறைவான கட்டணத்திலோ பெறலாம். மேலும், TNTecxperience திட்டத்திற்கான இணையதளத்தையும் ( https://tntecxperience.com) முதல்வர் தொடங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு நிதி தொழில் நுட்ப முதலீட்டுக் களவிழா – TN PitchFest – தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் சூழலை தொழில் மூலதன நிறுவனங்கள் மற்றும் புது முதலீட்டாளர்களுக்கு அறியப்படுத்தும் வகையில் ஒரு நிதிநுட்ப முதலீட்டுக் களவிழா (TN PtichFest), முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. வழிகாட்டி நிறுவனமும், StartupTN நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தினை மேற்கொள்கின்றன.

---

**2. குடியரசுத்தலைவர் தேர்தல்: தமிழகக் கட்சிகளின் வாக்கு மதிப்புகள் எவ்வளவு?**

தமிழகத்தில் குடியரசுத்தலைவர் தேர்தலில் பதிவாக உள்ள வாக்குகளின் மதிப்பு 81 ஆயிரத்து 84. இதில், தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 41 ஆயிரத்து 184. மக்களவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 27 ஆயிரத்து 300. மாநிலங்களவைஉறுப்பினர்கள் வாக்கு மதிப்பு 12 ஆயிரத்து 600. குடியரசுத்தலைவர் தேர்தலில் வெற்றி பெற வேட்பாளர் 50 சதவீதம் அளவு வாக்கு மதிப்புகளைப் பெறவேண்டும். மொத்த வாக்குகளின் மதிப்பு 10 லட்சத்து 86 ஆயிரத்து 431. அதில் 50 சதவீதம் பெறும் வேட்பாளர், இந்தியாவின் அடுத்த குடியரசுத்தலைவராக தேர்வு செய்யப்படுவார்.

இந்தியாவில் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான வாக்கு மதிப்பு என்பது சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான வாக்கு மதிப்பில் இருந்தே தொடங்குகிறது. 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகையை அடிப்படையாகக்கொண்டு, வாக்கு மதிப்பு கணக்கிடப்படுகிறது. ஒட்டுமொத்த சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை ஆயிரத்தால் பெருக்கி வரக்கூடிய தொகையைக்கொண்டு, மக்கள்தொகையின் எண்ணிக்கையை வகுத்தால் ஒரு மாநிலத்தில் ஒரு சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினரது வாக்கு மதிப்பு தெரிந்துவிடும்.

இந்தியாவிலேயே உத்தர பிரதேச மாநிலத்தில் மொத்தம் 403 பேரவைத் தொகுதிகள் உள்ளன. அந்த மாநிலத்தில் ஒட்டுமொத்த பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 83 ஆயிரத்து 824. இதைத்தொடர்ந்து, மேற்கு வங்கத்தில் 294 பேரவை உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த மாநிலத்தில் பேரவை உறுப்பினர்களின் மொத்த வாக்கு மதிப்பு 44 ஆயிரத்து 394. மகாராஷ்டிரம், பிகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழகம் வருகிறது. இங்கு, ஒரு சட்டப்பேரவை உறுப்பினருக்கான வாக்கு மதிப்பு 176. மொத்த பேரவை உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 41 ஆயிரத்து 184.

**நாடாளுமன்ற உறுப்பினர்கள்**: இந்தியாவில் 543 மக்களவை உறுப்பினர் பதவியிடங்களும், 233 மாநிலங்களவை பதவியிடங்களும் உள்ளன. மொத்தமாக நாடாளுமன்ற இடங்களின் எண்ணிக்கை 776. நாட்டிலுள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களின் மொத்த வாக்கு எண்ணிக்கையான 5.43 லட்சத்தை மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக்கொண்டு (776) வகுக்கும்போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் வாக்கு மதிப்பு கிடைக்கும். அதன்படி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை அல்லது மாநிலங்களவை) வாக்கு மதிப்பு 700.

**எந்தெந்த கட்சிக்கு எவ்வளவு?**

தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளும், 39 மக்களவை, 18 மாநிலங்களவை இடங்களும் உள்ளன. இதில், ஆளும் திமுகவுக்கு பேரவையில் 133 உறுப்பினர்களும், மக்களவையில் 24 உறுப்பினர்களும், மாநிலங்கள் அவையில் 10 பேரும் உள்ளனர். அதிமுகவுக்கு பேரவையில் 66 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 4 பேரும், மக்களவையில் ஒருவரும் உள்ளனர். தமிழக காங்கிரஸ் கட்சிக்கு பேரவையில் 18 பேரும், மக்களவையில் 8 பேரும், மாநிலங்களவையில் ஒருவரும் உள்ளனர். ஒட்டுமொத்தமாக கணக்கிடும் போது, குடியரசுத்தலைவர் தேர்தலில் திமுக 47 ஆயிரத்து 208 வாக்கு மதிப்புகளை வைத்துள்ளது.

**1. 'அல்லூரி சீதாராம இராஜு' என்பவர் இன்றைய எந்த மாநிலத்தைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரராவார்?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. கர்நாடகா



✓ விடுதலைப்போராட்ட வீரர் அல்லூரி சீதாராம இராஜுவின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு முப்பது அடி உயர வெண்கலச்சிலையை பிரதமர் மோடி திறந்து வைத்தார். ஆந்திர பிரதேச மாநிலம் பீமாவரத்தில் உள்ள க்ஷத்ரிய சேவா சமிதியால் 15 டன் எடைகொண்ட இந்தச் சிலை ₹3 கோடி செலவில் செதுக்கப்பட்டு நிறுவப்பட்டது. இரம்பசோடவரம் காட்டுப்பகுதியில், வலிமைமிக்க ஆங்கிலேயப் படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட 'ராம்பா கிளர்ச்சி' அல்லது 'மான்யம் எழுச்சிக்காக அவர் அறியப்படுகிறார்.

**2. 'எண்ணியல் இந்தியா வாரம் – 2022'இன் கருப்பொருள் என்ன?**

**அ. Catalyzing New India's Techade ☑**

ஆ. India's Digital Start Ups

இ. Local to Global

ஈ. Atmanirbhar Start up Ecosystem




✓ குஜராத் மாநிலத்தில் உள்ள காந்திநகரில், 2022 – டிஜிட்டல் இந்தியா வாரத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். "Catalyzing New India's Techade" என்பது 2022 – டிஜிட்டல் இந்தியா வாரத்தின் கருப்பொருளாகும்.

✓ இந்திய மொழிகளில் இணையம் மற்றும் டிஜிட்டல் சேவைகளை எளிதாக அணுகும் வகையில், 'டிஜிட்டல் இந்தியா பாஷினி'யையும் பிரதமர் தொடங்கிவைத்தார். 'டிஜிட்டல் இந்தியா ஜெனிசிஸ்' – நாடு தழிவிய தொழில்நுட்பம் உள்ளார்ந்த துளிர் நிறுவல் தளம், அடுக்கு–II மற்றும் அடுக்கு–III நகரங்களில் ₹750 கோடி செலவில் வெற்றிகரமான துளிர் நிறுவல்களை ஆதரிக்கும் வகையில் இது தொடங்கப்பட்டது. இந்தியா ஸ்டேக்கின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களின் உலகளாவிய களஞ்சியமான 'Indiastack.global'உம் அப்போது தொடங்கப்பட்டது.

**3. 'மாநிலங்களின் துளிர்–நிறுவல்கள் தரவரிசை – 2021'ஐ வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

**ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ. நிதி அமைச்சகம்

ஈ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

वाणिज्य एवं उद्योग मंत्रालय MINISTRY OF COMMERCE AND INDUSTRY सत्यमेव जयते

✓ தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT), வணிகம் & தொழிற்துறை அமைச்சகம், 'மாநிலங்களின் துளிர்–நிறுவல்கள் தரவரிசை – 2021'ஐ வெளியிட்டுள்ளது. தரவரிசை ஏழு சீர்திருத்தப் பகுதிகளில் கவனஞ்செலுத்துகிறது. குஜராத், கர்நாடகா மற்றும் மேகாலயா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன; பீகார், ஆந்திர பிரதேசம், மிசோரம் மற்றும் லடாக் ஆகியவை வளர்ந்து வரும் துளிர்–நிறுவல்கள் சூழலமைப்பைக் கொண்டுள்ளன. கேரளா, மகாராஷ்டிரா, ஒடிஸா, தெலுங்கானா மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகியவை சிறந்த செயல்திறன்கொண்ட பிரிவில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'லிஸ்பன் பிரகடனம்' என்பது பின்வரும் எதன் பாதுகாப்போடு தொடர்புடையது?**

அ. வளி ஆ. மலைகள்

**இ. பெருங்கடல்கள் ☑** ஈ. நன்னீர் பனிப்பாறைகள்

UNITED NATIONS OCEAN CONFERENCE LISBON 27 JUNE - 1 JULY 2022

✓ "நமது பெருங்கடல், நமது எதிர்காலம், நமது பொறுப்பு" என்ற லிஸ்பன் பேரறிவிப்பை ஒருமனதாக ஏற்றுக் கொண்டதன்மூலம் ஐநா–இன் பெருங்கடல் மாநாடு – 2022 நிறைவடைந்தது. 150–க்கும் மேற்பட்ட நாடுகள் கடல்சார் அவசரநிலைக்குத் தீர்வுகாண அறிவியல் அடிப்படையிலான மற்றும் புதுமையான நடவடிக்கைகளை அதிகரிக்க ஒப்புக்கொண்டன. லிஸ்பன் பேரறிவிப்பு வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் திறன் சவால்களை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

**5. தையற்கார எறும்புகளைக் கொண்டு செய்யப்படும், 'கை சட்னி' என்பது எம்மாநிலத்தின் பிரபல உணவாகும்?**



அ. ஜார்கண்ட்

**ஆ. ஒடிஸா ☑**

இ. சத்தீஸ்கர்

ஈ. மேற்கு வங்கம்

✓ ஒகோபில்லா ஸ்மரக்டினா என்ற அறிவியல் பெயர்கொண்ட தையற்கார எறும்புகள், ஒடிஸா மாநிலத்தின் மயூர்பஞ்சு மாவட்டத்தில் காணப்படுகின்றன. அம்மாவட்ட மக்கள் குறிப்பாக பழங்குடியினர், 'கை சட்னி' என்று அழைக்கப்படும் எறும்புகளைக்கொண்டு செய்யப்படும் உணவுப்பொருளைச் செய்கிறார்கள். ஒடிஸாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் 'கை சட்னி'க்குப் புவிசார் குறியீட்டைப் (GI) பெறுவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**6. அண்மையில் கொலம்பியாவின் முதல் கறுப்பின துணை அதிபரானவர் யார்?**



அ. குஸ்டாவோ பெட்ரோ

**ஆ. பிரான்சியா மார்க்வெஸ் ☑**

இ. விர்ஜிலியோ பார்கோ வர்காஸ்

ஈ. ஜுவான் குவைடோ

✓ கொலம்பியாவின் துணை அதிபராக பதவியேற்கும் முதல் கறுப்பின பெண் என்ற பெருமையை பிரான்சியா மார்க்வெஸ் பெற்றுள்ளார். சுற்றுச்சூழல் ஆர்வலரான இவர், தங்கச்சுரங்கத்திற்கு எதிராக போராடியதற்காக கடந்த 2018ஆம் ஆண்டு மதிப்புமிக்க 'கோல்ட்மேன் சுற்றுச்சூழல்' பரிசைப் பெற்றார்.

**7. இந்திய கடலோரக் காவல்படையின் '840 படையணி' எங்கு உருவாக்கப்பட்டது?**



அ. விசாகப்பட்டினம்

**ஆ. சென்னை ☑**

இ. தஞ்சாவூர்

ஈ. மும்பை

✓ இந்திய கடலோரக் காவல்படையின் புதிய வான்படை '840 படையணி' என்ற பெயரில் 2022 ஜூன்.20 அன்று சென்னையில் உருவாக்கப்பட்டது. இந்தப் படையணி தொடக்கத்தில் உள்நாட்டு ALH மார்க்–III வானூர்திகொண்டு உருவாக்கப்பட்டது. கிழக்குப்பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள முதல் வானூர்தி இதுவாகும்.

**8. சமீப செய்திகளில் இடம்பெற்ற கும்பு பனியாறு அமைந்துள்ள இடம் எது?**



அ. இந்தியா ஆ. பூட்டான்

**இ. நேபாளம் ☑** ஈ. திபெத்

✓ கும்பு பனியாறானது நேபாளத்தின் கும்பு பகுதியில் எவரெஸ்ட் சிகரத்திற்கும் லோட்சே–நுப்ட்சே மலைமுகட்டுக்கும் இடையே அமைந்துள்ளது. இமயமலையிலுள்ள பல பனியாறுகளைப் போலவே, கும்பு பனியாறும் வெகுவேகமாக உருகி வருகிறது. இது நேபாளத்தின் எவரெஸ்ட் முகாமுக்கு மிகவும் ஆபத்தானதாகப் பார்க்கப்படுகிறது.

**9. ASEAN–இந்தியா நட்புறவு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள ஆண்டு எது?**

அ. 2021

**ஆ. 2022 ☑**

இ. 2023

ஈ. 2025

2022

✓ ASEAN–இந்தியாவின் நட்புறவு ஆண்டாக நடப்பு 2022ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு, இந்தியா மற்றும் ASEAN நாடுகளுக்கு இடையேயான உறவுகளின் முப்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இரு தரப்புக்கும் இடையிலான அரசியல் ரீதியான உறவுகள் கடந்த 1990–களின் முற்பகுதியில் தொடங்கியது.

**10. சர்வதேச இலக்கிய விழாவான, 'Unmesha – அன்மேஷா' ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாநிலம்/UT எது?**

**அ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

ஆ. குஜராத்

இ. தெலுங்கானா

ஈ. கேரளா




✓ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் 3 நாள் நடக்கும் சர்வதேச இலக்கிய விழாவான, 'Unmesha' ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவை மத்திய கலாச்சாரத்துறை இணையமைச்சர் அர்ஜுன் இராம் மேகவால் தொடங்கி வைத்தார்.

✓ 15 நாடுகளைச் சேர்ந்த 425–க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், கவிஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், விமர்சகர்கள் மற்றும் பிரமுகர்கள், 60–க்கும் மேற்பட்ட மொழிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். 'விடுதலைப் பெருவிழா' நிகழ்வின் ஒருபகுதியாக, ஹிமாச்சலப் பிரதேச மாநில கலை மற்றும் கலாச்சாரத் துறையின் ஆதரவுடன் மத்திய கலாச்சார அமைச்சகம் மற்றும் சாகித்ய அகாடமி இணைந்து இந்த விழாவை நடத்துகின்றன.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. RIMPAC துறைமுக ஒத்திகையில் இந்திய கடற்படையின் INS சாத்புரா மற்றும் பி–81 பங்கேற்பு**

பசிபிக் வளைய போர்ப்பயிற்சி ஒத்திகையான ரிம்பாக்கில் (RIMPAC) உலகின் மிகப்பெரிய பன்னாட்டு கடற்படை ஒத்திகையில் பங்கேற்பதற்காக, இந்திய கடற்படையின் முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரிக்கப்பட்ட INS சாத்புரா போர்க்கப்பலும், பி–81 LRMRASW விமானமும், ஹவாய் தீவின் முத்துத் துறைமுகத்திற்கு சென்றுள்ளன. இதில் சாத்புரா கப்பல் 27 ஜூன் 2022 அன்று ஹவாயை சென்றடைந்த நிலையில், பி–81 விமானம் 2022 ஜூலை.2 அன்று சென்றடைந்தது. துறைமுக வளாகத்தில் நடைபெறும் இந்த ஒத்திகையின் ஒரு பகுதியாக, கருத்தரங்குகள், திட்டமிடல், விவாதங்கள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படுகிறது.

ஆறு வார காலம் நடைபெறும் இந்தப் போர் பயிற்சியில் INS சாத்புரா மற்றும் ஒரு பி–81 கடலோர ரோந்து விமானமும் பங்கேற்றுள்ளன. நட்பு நாட்டு கடற்படைகளிடையே, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில், இந்தப் போர்ப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 28 நாடுகளைச் சேர்ந்த 38 போர்க்கப்பல்கள், 9 நாடுகளின் தரைப் படையினர், 31 ஆளில்லா சாதனங்கள், 170 விமானங்கள் மற்றும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். கடல் ஒத்திகை ஜூலை.12ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், ஆகஸ்ட்.4ஆம் தேதி பயிற்சி நிறைவு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

---

**2. புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொருள் கதிரியக்க ஒளியை புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றும்**

வெப்பத்தை வெளியிடுகிற கதிரியக்க ஒளியை மாற்றியமைக்கின்ற புதிய பொருள் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சூரிய மற்றும் வெப்பசக்தியை பயன்படுத்தும் உயர்திறன் கொண்டதாக இது இருக்கும்.

மின்னுற்பத்தி, தொலைத்தகவல் தொடர்பு, பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து தொழில்நுட்பங்கள், உணர்வுக்கருவிகள், சுகாதார கவனிப்பு சேவைகள் போன்றவற்றுக்கு பயன்படத்தக்க, புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரமாக மின்காந்த இயல் அலைகள் உள்ளன. இத்தகைய அலைகளை உயர்தொழில்நுட்பமுறைகளை பயன்படுத்தி துல்லியத்தன்மை உடையதாக அறிவியலாளர்கள் மாற்றமுடியும். தனித்தன்மைகொண்ட பொருட்களை பயன்படுத்தி இதன் அளவு மனித ரோமத்தைவிட ஆயிரம் மடங்கு சிறியதாக இருக்கும். இருப்பினும் இதனை கண்டறிவதும், மாற்றியமைப்பதும் சிரமம் என்பதால், அனைத்து ஒளி அலைகளையும் குறிப்பாக கதிரியக்க ஒளியை எளிதாக பயன்படுத்த முடியாது.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான பெங்களூருவில் உள்ள நவீன அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக SCN (single–crystalline scandium nitride) என்றழைக்கப்படும் புதிய பொருளை கண்டுபிடித்துள்ளனர்.

நவீன அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையத்தை தவிர, இந்திய அறிவியல் கல்விக்கழகத்தைச் சேர்ந்த நானோ அறிவியல் மற்றும் பொறியியல் மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், சிட்னி பல்கலைக் கழகமும், இந்த ஆய்வில் பங்கேற்றன. இந்த ஆய்வுபற்றிய விவரம் நானோ லெட்டர்ஸ் எனப்படும் அறிவியல் இதழில் அண்மையில் வெளியிடப்பட்டது.

---

**3. உணவகங்கள் சேவைக் கட்டணம் வசூலிக்கக் கூடாது**

உணவகங்களும் தங்கும் விடுதிகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து சேவைக்கட்டணம் எதையும் வசூலிக்கக் கூடாது என்று மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) உத்தரவிட்டுள்ளது. உணவகங்களும் தங்கும் விடுதிகளும் கட்டண ரசீதில் சேவைக் கட்டணத்தை விதிப்பதாக மத்திய அரசிடம் வாடிக்கையாளர்கள் பலர் புகார் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், சிசிபிஏ தலைமை ஆணையர் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உணவகங்களும் தங்கும் விடுதிகளும் தாமாக சேவைக் கட்டணத்தை விதிக்கக் கூடாது. வேறு எந்தப் பெயரிலும் சேவைக்கட்டணத்தை வசூலிக்கக்கூடாது. எந்த உணவகமும், தங்கும் விடுதியும் சேவைக்கட்டணம் செலுத்துமாறு வாடிக்கையாளரைக் கட்டாயப்படுத்த முடியாது. வாடிக்கையாளர் விரும்பினால் மட்டுமே சேவைக்கட்டணத்தை வழங்கலாம். இதை உணவகங்களும் தங்கும் விடுதிகளும் வாடிக்கையாளர்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். வழிகாட்டுதல்களை மீறி எந்த உணவகமோ தங்கும் விடுதியோ சேவைக் கட்டணத்தை வசூலித்தால், அதை நீக்குமாறு வாடிக்கையாளர்கள் கோரலாம். அதையும் மீறி சேவைக் கட்டணம் வசூலிக்கப்பட்டால், வாடிக்கையாளர்கள் அதுதொடர்பாக நுகர்வோர் ஆணையத்தில் புகாரளிக்கலாம்.

தேசிய நுகர்வோர் உதவிமையத்தின் தொலைபேசி எண்ணான 1915 வாயிலாகவோ அல்லது தேசிய நுகர்வோர் உதவி மையத்தின் செயலி வாயிலாகவோ புகார் தெரிவிக்கலாம். இணைய வழியாகவும் புகார் தெரிவிக்க முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**4. புதிய தொழில் நிறுவனங்களுக்கான முன்னெடுப்புகள்: தெளிவான பார்வையுடன் தமிழ்நாடு: மத்திய அரசு**

புதிய தொழில் நிறுவனங்களுக்கான (ஸ்டார்ட்–அப்) முன்னெடுப்புகளில் தெளிவான பார்வை மற்றும் இலக்குகளை தமிழ்நாடு கொண்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஸ்டார்ட்–அப்களுக்கான உகந்த சூழலை வழங்கும் மாநிலங்களின் தரவரிசை அறிக்கையை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தில்லியில் வெளியிட்டார். ஸ்டார்ட்–அப் முன்னெடுப்புகளை உருவாக்குதல், ஸ்டார்ட்–அப்களுக்கு ஆதரவான முன்னெடுப்புகளைக் கண்டறிந்து முறைப்படுத்துதல், ஸ்டார்ட்–அப்களுக்கான முன்னெடுப்புகளில் தெளிவான பார்வை மற்றும் இலக்குகளை கொண்டிருத்தல், ஸ்டார்ட்

அப்களுக்கான சூழலில் சிறந்த முன்னேற்றம், ஸ்டார்ட்–அப்களுக்கான மிகச்சிறந்த முன்னெடுப்புகள் மற்றும் புதுமையான நடவடிக்கைகள் என அந்தத் தரவரிசையில் 5 பிரிவுகளில் 24 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மாநிலமும் யூனியன் பிரதேசமும் பிறமாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடம் உள்ள சிறந்த நடைமுறைகளைக் கற்று ஸ்டார்ட்–அப்களுக்கு உகந்த சூழலை உருவாக்க உதவும் நோக்கில் இந்த தரவரிசை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

---

**5. காரியாபட்டி அருகே சமணர் பள்ளி தடயங்கள் கண்டெடுப்பு**

காரியாபட்டி அருகே புல்லூர் கிராமத்தில் ஆயிராத்து நூறு ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் பள்ளி தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம் புல்லூர் கிராமத்தில் பழைமையான இடிந்த கோவிலில் கல்வெட்டுகள் இருப்பதாக அக்கிராமத்தினர் தகவல் கொடுத்தனர். அதன்படி, பாண்டிய நாடு பண்பாட்டு மையத்தைச் சேர்ந்த வரலாற்று ஆர்வலர் மதுரை அருண் சந்திரன் நேரில் சென்று ஆய்வுசெய்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: இந்தக் கோவில் வளாகத்தில் ஆய்வுமேற்கொண்டதில் மொத்தம் ஒன்பது துண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவை அனைத்திலும் வட்டெழுத்து மற்றும் கிரந்த எழுத்தால் எழுதப்பட்டுள்ளன. இதில் முற்கால பாண்டிய மன்னன் மாறன் சடையனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டும், இராஜராஜ சோழன் இக்கோவிலுக்குக் கொடுத்த நிவந்தம் பற்றிய கல்வெட்டும் காணப்படுகிறது. புல்லூரின் பழைய பெயர் திருப்புல்லூர் என்று கல்வெட்டின்மூலம் தெரிய வருகிறது. இது 1100 ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் பள்ளியின் தடயங்கள் ஆகும். இது ஒரு சமணர் பள்ளியாக செயல்பட்டு வந்துள்ளது. இக்கோவிலின் பெயர் திருப்புல்லூர் பெரும்பள்ளி, உள்ளிருக்கும் இறைவன் அருகர் பட்டாளகர் என்பதை அறிய முடிகிறது. கோவிலில் நந்தா விளக்கு எரிக்க ஆடுகள் தானமாக வழங்கப்பட்டதும் இக்கல்வெட்டுகள்மூலம் அறிந்துகொள்ளலாம். பாண்டிய நாட்டில் சமண மதம் சிறப்பான நிலையில் இருந்ததற்கு இச்சமணப்பள்ளியே ஒரு சிறந்த உதாரணம். ஏற்கனவே, விருதுநகர் மாவட்டம் குரண்டியில் திருக்காட்டாம்பள்ளி என்ற சமணர் பள்ளி கண்டறியப்பட்டுள்ள நிலையில், தற்போது கண்டறியப்பட்டுள்ள இப்பள்ளி இரண்டாவது சமணப்பள்ளியாகும். மேலும் குண்டாற்றின் மேல் கரையான மேல உப்பிலிகுண்டு கிராமத்தில் தீர்த்தங்கரர் சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது. இங்குள்ள 9 துண்டு கல்வெட்டுகளையும் முறையாகபடி எடுத்து ஆய்வு செய்ய தொல்லியல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

---

**1. COVID-19'ஐ நிர்வகிப்பதற்கான AYUSH நடைமுறைகளின் தொகுப்பை சமீபத்தில் வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. AIIMS

ஆ. ஆயுஷ் அமைச்சகம்

**இ. NITI ஆயோக் ☑**

ஈ. WHO

✓ COVID-19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மையில், நாட்டிலுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பின்பற்றப்படும் AYUSH அடிப்படையிலான சிகிச்சைபற்றிய தகவல்களின் தொகுப்பை NITI ஆயோக் அண்மையில் வெளியிட்டது.

**2. 'பரிக்ஷா சங்கம்' என்ற இணையதளத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

அ. UGC

**ஆ. CBSE ☑**

இ. NTA

ஈ. IGNOU

✓ மத்திய இடைநிலைக்கல்வி வாரியம் (CBSE) 'பரிக்ஷா சங்கம்' என்ற புதிய இணையதளத்தைத் தொடங்கியுள்ளது. தேர்வு முடிவுகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய தேர்வு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்குமான ஒரே தளமமாக இவ்விணையதளம் செயல்படும். பள்ளிகள் (கங்கை), பிராந்திய அலுவலகங்கள் (யமுனை) மற்றும் தலைமை அலுவலகம் (சரசுவதி) என மூன்று பகுதிகளை இது கொண்டுள்ளது.

**3. உற்பத்தி நிறுவனங்களுக்கான OBICUS (Order Books, Inventories மற்றும் Capacity Utilisation) கணக்கெடுப்பை நடத்துகிற நிறுவனம் எது?**

அ. DPIIT

ஆ. FICCI

**இ. RBI ☑**

ஈ. DIPAM

✓ இந்திய ரிசர்வ் வங்கி அதன் OBICUS (Order Books, Inventories மற்றும் Capacity Utilisation) கணக்கெடுப்பின் அடுத்த சுற்றைத் தொடங்கியுள்ளது. இந்தக் கணக்கெடுப்பின் முடிவுகள் பணவியல் கொள்கையாக்கத்திற்கான மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்குகின்றன. OBICUS-இன் 58ஆவது சுற்று 2022 ஏப்ரல் – ஜூன் காலகட்டத்திற்கானதாகும். இக்கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள், குறிப்பு காலாண்டில் பெறப்பட்ட புதிய பணிப்புகள், பணிப்புகளின் பின்னுறுத்தல், நிலுவையில் உள்ள மற்றும் மொத்த சரக்குகளின் தரவு ஆகியவற்றை கொண்டிருக்கும்.

**4. இந்தியாவில் தேசிய நுகர்வோர் உதவி அழைப்பு எண் யாது?**

1915

அ. 1980 ஆ. 1998

**இ. 1915 ☑** ஈ. 1812

✓ மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமானது உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகள் உணவுக்கட்டணத்தில் 'தாமாகவோ அல்லது இயல்பாகவோ' சேவைக் கட்டணத்தைச் சேர்ப்பதைத் தடைசெய்துள்ளது. மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கூற்றுப்படி, இது குறித்த புகார்களை தேசிய நுகர்வோர் உதவி அழைப்பு மைய எண்ணான 1915 அல்லது NCH திறன்பேசி செயலிமூலம் அளிக்கலாம்.

**5. மெட்ராஸ் ஐஐடி உருவாக்கிய 'ஹோமோசெப்' என்ற ரோபோவின் தனித்துவமான அம்சம் என்ன?**




அ. குழந்தைகளில் நிமோனியாவைக் கண்டறிகிறது

**ஆ. கழிவுநீர் தொட்டிகளை சுத்தஞ்செய்வது ☑**

இ. டவுன் நோய்க்குறியைக் கண்டறிகிறது

ஈ. மின்னணுக்கழிவுகளை மறுசுழற்சி செய்கிறது

✓ மனித ஈடுபாடு இல்லாமல் கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தஞ்செய்யும் ரோபோவை மெட்ராஸ் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். 'HomoSEP' எனப் பெயரிடப்பட்ட இதன் தயாரிப்பிற்கும் மேம்பாட்டிற்கும் GAIL (இந்தியா) உதவி புரிந்தது. முதற்கட்டமாக தமிழ்நாடு முழுமைக்கும் பத்து அலகுகள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கையால் தூய்மைப்படுத்தும் முறையை ஒழிக்கும் நோக்கோடு இந்த ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**6. சர்வதேச கடலோர தூய்மைப்படுத்துதல் நாள் கொண்டாடப்படுகிற மாதம் எது?**



அ. ஜூன்

ஆ. ஜூலை

இ. ஆகஸ்ட்

**ஈ. செப்டம்பர் ☑**

✓ 'அமுதப்பெருவிழா'வின் நினைவாக நாட்டின் 75 கடற்கரைகளை சுத்தஞ்செய்யும் வகையில் இந்தியா தனது கடற்கரையைச் சுத்தஞ்செய்யும் திட்டத்தை சமீபத்தில் தொடங்கியது. 2022 ஜூலை.3ஆம் தேதி முதல் செப்.17ஆம் தேதி வரை 75 நாட்களுக்கு நாடு முழுவதும் கடலோர தூய்மைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்; இது சர்வதேச கடலோர தூய்மைப்படுத்தும் நாளாகவும் கொண்டாடப்படுகிறது. கடற்கரையோரங்களிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு டன் குப்பைகளை அகற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**7. 110ஆவது பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டின் முழு அமர்வு நடைபெறும் இடம் எது?**

**அ. ஜெனீவா ☑**

ஆ. பாரிஸ்

இ. சென்னை

ஈ. கோயம்புத்தூர்

International Labour Organization

✓ நடுவண் அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஜெனிவாவில் 110ஆவது பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டின் முழுமையான அமர்வில் உரையாற்றினார். பன்னாட்டு தொழிலாளர் மாநாடு பன்னாட்டு தொழிலாளர் தரநிலைகள் மற்றும் ILOஇன் பரந்த கொள்கைகளை அமைக்கிறது. 187 ILO உறுப்புநாடுகளைச்சேர்ந்த அரசாங்கங்கள், பணியமர்த்துநர்கள் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மிகப்பெரிய சர்வதேசக் கூட்டம் இதுவாகும்.

**8. UNESCO உலக உயிர்க்கோளக் காப்பகங்களில் சமீபத்தில் சேர்க்கப்பட்ட குவ்ஸ்குல் ஏரி தேசியப்பூங்கா அமைந்து உள்ள நாடு எது?**



அ. உக்ரைன்

**ஆ. மங்கோலியா ☑**

இ. சிலி

ஈ. மெக்ஸிக்கோ

✓ மங்கோலியாவின் குவ்ஸ்குல் ஏரி தேசியப்பூங்கா சமீபத்தில் UNESCOஇன் உயிர்க்கோளக் காப்பகங்களின் உலக வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் பாரிஸில் நடைபெற்று வரும் மனிதனும் உயிர்க்கோளமும் திட்டத்தின் பன்னாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் 34ஆம் அமர்வின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. குவ்ஸ்குல் ஏரி வட மங்கோலியாவில் ரஷ்ய எல்லைக்கருகில் அமைந்துள்ளது; இது, மங்கோலியாவின் நன்னீரில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

**9. 498 இரன்கள் என்ற ஒரு நாள் சர்வதேச ஸ்கோரை எடுத்து உலக சாதனை படைத்த கிரிக்கெட் அணி எது?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. இங்கிலாந்து ☑**

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. மேற்கிந்திய தீவுகள்

✓ நெதர்லாந்துக்கு எதிராக 498 இரன்கள் என்ற ஒரு நாள் சர்வதேச ஸ்கோரை எட்டிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி, ஆம்ஸ்டெல்வீனில் நடந்த போட்டியில் 232 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இங்கிலாந்து அணி, 2018இல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டிரெண்ட் பிரிட்ஜில் அடைந்த 481–6 என்ற தனது முந்தைய சாதனையை இதன்மூலம் முறியடித்தது. ஆட்டநாயகன் ஜோஸ் பட்லர் 47 பந்துகளில் சதத்துடன் ஆட்டமிழக்காமல் 162 இரன்கள் எடுத்தார்.

**10. அண்மைய MFIN அறிக்கையின்படி, நிலுவையில் உள்ள சிறுநிதி கடன்களின் அடிப்படையில் முன்னிலையில் உள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. குஜராத்

இ. தெலுங்கானா

ஈ. கேரளா

✓ Microfinance Institutions Network (MFIN) வெளியிட்ட காலாண்டு அறிக்கையின்படி, தமிழ்நாடு மேற்கு வங்கத்தை இடமாற்றஞ்செய்து, சிறுநிதி கடன்கள் நிலுவையில் உள்ள மிகப்பெரிய மாநிலமாக உருவெடுத்துள்ளது. 2022 மார்ச் 31 நிலவரப்படி தமிழ்நாட்டின் மொத்தக் கடன் நிலுவை ₹36,806 கோடியாக இருந்தது; அதே சமயம் ஒட்டுமொத்த நுண்நிதித்துறையில் 2022 மார்ச்.31 நிலவரப்படி ₹2,85,441 கோடி கடன் நிலுவை உள்ளது. NBFC–MFI–களைத் தொடர்ந்து நுண் நிதிக் கடன்களை அதிகம் கொண்டவையாக வங்கிகள் உள்ளன.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் நூல் வெளியீடு**

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல நீதிபதி K இராமகிருஷ்ணன், "இந்தியாவில் அணுகல் மற்றும் நன்மை பகிர்வு நீதித்துறையின் பரிணாமம் – வளர்ந்து வரும் போக்குகள், சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் வழி" என்ற நூலை வெளியிட்டார். இந்நூலை சென்னை தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின், எக்ஸலண்ட் பள்ளியின் பேராசிரியர் டாக்டர். எஸ் ஏழுமலை, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் செயலர் ஜே ஜஸ்டின் மோகன் ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர்.

இந்தியாவில் பல்வேறு சட்டங்களின்கீழ் காடுகளில் வசிக்கும் பழங்குடி சமூகங்கள் மற்றும் விவசாயிகளுக்கு பலன்களைப்பகிர்ந்தளிக்கும் பரிணாம வளர்ச்சியையும், வணிக மதிப்பைக்கொண்ட நமது உயிரியல் வளங்களைப் பாதுகாக்க நிறுவனங்களின் நன்மைப் பகிர்வின் முக்கியத்துவத்தையும் இந்தப் புத்தகம் விவரிக்கிறது. இந்த புத்தகம் உலகின் பல்வேறு பகுதிகளில் சில வெற்றிகரமான பலன் பகிர்வு தொடர்பான பிரச்சனைகளில் இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள் வழங்கிய சில முக்கிய தீர்ப்புகளை உள்ளடக்கியது. தேசிய பல்லுயிர் ஆணையத்தின்

செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டத்தையும் புத்தகம் வழங்குகிறது உயிரி பல்லுயிர் பெருக்க சட்டம், 2002–இன் கீழ் இந்தியாவில் பயன்பகிர்வு பொறிமுறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் இது வழங்குகிறது.

---

**2. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டஅமலாக்கம்: 9–ஆவது இடத்தில் தமிழகம்**

நிகழாண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை சிறப்பாக அமலாக்கம் செய்யும் மாநிலங்களில் தமிழகம் 9–ஆவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் ஒடிஸாவும், இரண்டாமிடத்தில் உத்தர பிரதேசமும், மூன்றாமிடத்தில் ஆந்திர பிரதேசமும் உள்ளன.

---

**3. யூரியா உற்பத்தியில் 2025–இல் தன்னிறைவு: மன்சுக் மாண்டவியா**

வரும் 2025–இல் இந்தியாவின் யூரியா உற்பத்தி தன்னிறைவைக் காணும் என மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: தற்போது நாட்டின் யூரியா உற்பத்தி 260 இலட்சம் டன்னாக உள்ளது. அதேநேரம், உள்ளூர் தேவையை ஈடுசெய்ய 90 இலட்சம் டன் அளவிலான யூரியா வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. யூரியா இறக்குமதியைப் படிப்படியாக குறைக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் இந்தத் தீவிர முயற்சியால் வரும் 2025–ஆண்டுக்குள் யூரியாவை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. உள்ளூர் தேவையை நிறைவுசெய்ய யூரியா மற்றும் நானோ திரவ யூரியா உற்பத்தி ஆண்டு தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் தன்னிறைவைக் காணும் என்றார் அவர்.

---

**1. EIU 'உலகளாவிய வாழத்தகு குறியீடு – 2022'இல் இந்தியாவில் முதலிடம் பிடித்த நகரம் எது?**

அ. பெங்களூரு

**ஆ. புது தில்லி ☑**

இ. மும்பை

ஈ. சென்னை




✓ ஐரோப்பியப் புலனாய்வுப்பிரிவு (EIU) சமீபத்தில் 'Global Liveability Index–2022'ஐ வெளியிட்டது. இது 173 நகரங்களை அவற்றின் வாழ்க்கை நிலைமைகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தியது. ஐந்து இந்திய நகரங்கள் – தில்லி, மும்பை, சென்னை, அகமதாபாத் மற்றும் பெங்களூர் ஆகியவை பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. தில்லி 140ஆவது இடத்திலும், மும்பை 141ஆவது இடத்திலும், சென்னை மற்றும் ஆமதாபாத் முறையே 142 மற்றும் 143ஆம் இடத்திலும் உள்ளன. இந்திய நகரங்களில் பெங்களூரு கடைசியாக 146ஆவது இடத்தில் உள்ளது.

**2. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தரவரிசைக் குறியீட்டில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஒடிசா ☑**

இ. ஆந்திரப் பிரதேசம்

ஈ. இராஜஸ்தான்



✓ உணவுத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், தேசிய உணவுப்பாதுகாப்புச்சட்டம், 2013–ஐச் செயல்படுத்துவதற்கான முதல் மாநில தரவரிசைக்குறியீட்டை வெளியிட்டார். நடப்பு 2022ஆம் ஆண்டில் 3 அளவுருக்களின் அடிப்படையில் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 20 பெரிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், ஒடிசா முதலிடத்தையும் உத்தரப்பிரதேசமும் ஆந்திரமும் அதைத் தொடர்ந்த இடங்களில் உள்ளன. கடைசி இடத்தில் கோவா உள்ளது. 14 சிறிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் திரிபுரா முதலிடத்திலும் லடாக் கடைசி இடத்திலும் உள்ளது.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற பீல்ட்ஸ் பதக்கத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ. கட்டிடக்கலை

ஆ. நிழற்படமெடுத்தல்

**இ. கணிதம் ☑**

ஈ. விளையாட்டு




✓ 'பீல்ட்ஸ் பதக்கம்' என்பது கணிதத்திற்கான நோபல் பரிசு என்றும் விவரிக்கப்படுகிறது. சுவிச்சர்லாந்தில் பணிபுரியும் உக்ரேனிய கணிதவியலாளரான மெரினா வியாசோவ்ஸ்கா, 2022 'பீல்ட்ஸ் பதக்கம்' பெற்ற நால்வருள் ஒருவராக அறிவிக்கப்பட்டார். 'பீல்ட்ஸ் பதக்கம்' சர்வதேச கணித ஒன்றியத்தால் வழங்கப்படுகிறது. இது ஒரு சர்வதேச அரசுசாரா மற்றும் இலாபநோக்கற்ற அறிவியல் அமைப்பாகும்; இது, கணிதத்தில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

**4. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட Dr இராஜேந்திர பிரசாத் நினைவு விருதுடன் தொடர்புடைய துறை எது?**

அ. கற்பித்தல்

**ஆ. பொது நிர்வாகம் ☑**

இ. சமூக சேவை

ஈ. தொழில்முனைவு



- ✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr ஜிதேந்திர சிங், கல்வித்துறையில் பொது நிர்வாகத்திற்கான Dr இராஜேந்திர பிரசாத் நினைவு விருதை நிறுவுவதாக அறிவித்தார். இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவரின் நினைவாக, புது தில்லியில் நடைபெற்ற இந்திய பொது நிர்வாகக் கழகத்தின் (IIPA) நிர்வாகக்குழு கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்கிய போது, இந்த விருதை அறிவித்தார்.

**5. சேவைத்துறையில் 11 ஆண்டுகளில் இல்லாத விரைவான வளர்ச்சியை, கீழ்க்காணும் எந்த மாதத்தில் இந்தியா பதிவுசெய்துள்ளது?**



அ. ஜனவரி, 2022

ஆ. ஏப்ரல், 2022

இ. மே, 2022

**ஈ. ஜூன், 2022 ☑**

- ✓ வலுவான தேவைக்கு இடையே 2022 ஜூனில் இந்தியாவின் சேவைத்துறை 11 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக விரைவாக விரிவடைந்துள்ளது. S&P குளோபல் இந்தியா சர்வீசஸ் பர்சேசிங் மேனேஜர்ஸ் இன்டெக்ஸ் ஜூன் மாதத்தில் 59.2–ஆக உயர்ந்தது; இது கடந்த 2011 ஏப்ரல் மாதத்துக்குப்பிறகு உயர்ந்துள்ளது. இதன்படி, பிடிவாதமான பணவீக்கம் கவலைக்குரியதாக உள்ளது; ஏனெனில் விலைகள் ஏறக்குறைய 5 ஆண்டுகளில் மிகக்கடுமையாக உயர்ந்துள்ளன.

**6. ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைத்துறையின் கூட்டுப்பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள மாநிலம் எது?**



அ. ஆந்திரப் பிரதேசம்

**ஆ. ஹரியானா ☑**

இ. ஒடிஸா

ஈ. கேரளா

- ✓ ஹரியானா மாநில அரசும் இஸ்ரேலும் ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை மற்றும் திறன் மேம்பாடு துறையின் கூட்டுப்பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளன. நீர்வள மேலாண்மைத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஹரியானாவின் அடல் பூஜல் யோஜனா திட்ட இயக்குநர் இஸ்ரேலின் பிரதிநிதியுடன் இந்தக் கூட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பவேரியன் ஆல்ப்ஸ் அமைந்துள்ள இடம் எது?**



அ. ரஷ்யா

ஆ. பிரான்ஸ்

**இ. ஜெர்மனி ☑**

ஈ. சுவிச்சர்லாந்து

- ✓ பவேரியன் ஆல்ப்ஸ் என்பது ஜெர்மன் மாகாணமான பவேரியாவில் அமைந்துள்ள மலைத்தொடர்கள் ஆகும். G7 தலைவர்களின் உச்சிமாநாடு 2022 ஜூன்.26 முதல் 28 வரை பவேரியன் ஆல்ப்ஸில் நடைபெற்றது. இந்த ஆண்டு தொடக்கத்தில், G7 தலைவர் பதவியை கைப்பற்றிய ஜெர்மனி இந்த நிகழ்வை நடத்தியது.

**8. ஸ்வதேஷ் தர்ஷன் திட்டமானது எந்த நடுவண் அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?**

அ. கலாச்சார அமைச்சகம் **ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑**

இ. இரயில்வே அமைச்சகம் ஈ. உள்துறை அமைச்சகம்

SWADESH DARSHAN

✓ இந்தியாவில் உள்ள கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலாக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக சுற்றுலா அமைச்சகத்தால் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த நடுவண் துறை திட்டத்தின்கீழ், சுற்றுலா சுற்றுகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நடுவண் அரசின் நிதி உதவி வழங்கப்படும்.

**9. BRICS குழுமத்தில் கடைசியாக இணைந்த நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. இங்கிலாந்து

**இ. தென்னாப்பிரிக்கா ☑**

ஈ. மேற்கிந்திய தீவுகள்



✓ 2010ஆம் ஆண்டு BRICS–இல் இணைந்த கடைசி உறுப்பு நாடு தென்னாப்பிரிக்கா ஆகும். மற்ற BRICS நாடுகள்: பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா. மொத்தத்தில், இந்த நாடுகள் உலக மக்கள்தொகையில் சுமார் நாற்பது சதவீதத்தையும், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முப்பது சதவீதத்தையும் கொண்டுள்ளன.

**10. அண்மையில் ஐநா சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஆனவர் யார்?**

அ. T S திருமூர்த்தி

**ஆ. ருச்சிரா காம்போஜ் ☑**

இ. தரஞ்சித் சிங் சந்து

ஈ. பூஜா கபூர்



✓ ருச்சிரா காம்போஜ், அண்மையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக ஆனார். ஐநா தூதராக, அவர் நியூயார்க் நகரத்தில் உள்ள ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தர தூதுக்குழுவின் தலைவராக இருப்பார். T S திருமூர்த்தியைத் தொடர்ந்து அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மிஷன் வாத்சல்யா திட்டத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுகிறது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்**

குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்புக்காக, 2009–10ஆம் ஆண்டு முதல், மத்திய நிதியுதவி திட்டமான 'மிஷன் வாத்சல்யா' என்ற குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. 'மிஷன் வாத்சல்யா'வின் நோக்கம், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும், நலமான மற்றும் மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தைப் பாதுகாப்பது, அவர்களின் முழுத்திறனை கண்டறிந்து, முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளை உறுதிசெய்தல், குழந்தைகள் வளர்ச்சிக்கு ஆதரவான மற்றும் ஏற்புடைய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குதல், இளம் சிறார் நீதிச்சட்டம் 2015–ஐ செயபல்படுத்துவதில், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு உதவுதல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது, கடினமான சூழல்களில், நிறுவனம் சாராத பராமரிப்பை ஊக்குவிப்பது.

'மிஷன் வாத்சல்யா' சட்டபூர்வ அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துதல், சேவையளிக்கும் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், உயர்தர நிறுவன பராமரிப்பு மற்றும் சேவை அளித்தல், நிறுவனம் சாராத சமூக ரீதியான பராமரிப்பை ஊக்குவித்தல், அவசரகால சேவைகள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடுகளை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

---

### 2. மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக இளையராஜா, P T உஷா தேர்வு

மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக (எம்.பி) பிரபல இசையமைப்பாளர் இளையராஜா, தடகள வீராங்கனை பி டி உஷா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ள இளைய ராஜாவுக்கு, கடந்த 2010–ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், 2018–ஆம் ஆண்டில் 'பத்ம விபூஷண்' விருதும் வழங்கப்பட்டது. இசையமைப்பாளராக மட்டுமல்லாமல் பல பாடல்களையும் அவர் எழுதியுள்ளார். தர்மசாலா கோவில் நிர்வாக அறங்காவலர் வீரேந்திர ஹெக்டே, பிரபல திரைக்கதை எழுத்தாளர் வி விஜயேந்திர பிரசாத் ஆகியோரும் மாநிலங்களவை நியமன எம்.பி–க்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கலை, இலக்கியம், விளையாட்டுத் துறைகளில் தலைசிறந்து விளங்குபவர்கள் மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாகத் தேர்வுசெய்யப்படுவது நடைமுறை.

---

### 3. பூஸ்டர் தடுப்பூசிக்கு இடைவெளி குறைப்பு

இந்தியாவில் கரோனா பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான கால இடைவெளி 9 மாதங்களிலிருந்து 6 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது. 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் கரோனா இரண்டாவது தடுப்பூசி செலுத்திய ஆறு மாதங்களுக்குப் பிறகு பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம் என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கரோனா தடுப்பூசி 2வது டோஸ் செலுத்திய பிறகு 9 மாதங்கள் அல்லது 39 வாரங்களுக்கு பிறகு, பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. அறிவியல் ஆதாரங்கள் மற்றும் உலக நாடுகளின் அடிப்படையில், இதனை 6 மாதங்கள் அல்லது 26 வாரங்களாக குறைக்க வேண்டும் என துணைக்குழு அளித்த பரிந்துரையை நோய் தடுப்புக்கான தேசிய தொழில்நுட்ப குழு ஏற்றுக்கொண்டது.

இதனால் 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்ட பிறகு, 6 மாதங்களுக்குப் பிறகு பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம்.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், முன்கள பணியாளர்கள், அரசு மருத்துவமனைகளில் இலவசமாக பூஸ்டர் தடுப்பூசி செலுத்தி கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 4. புற்றுநோய் கண்டறிதலுக்கு 'பிவோட்' கருவியை உருவாக்கிய சென்னை ஐஐடி ஆய்வுக்குழுவினர்

புற்றுநோய் கண்டறிதலுக்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 'பிவோட்' என்ற கருவியை சென்னை ஐஐடி ஆய்வுக்குழுவினர் உருவாக்கியுள்ளனர். இது ஒரு தனிநபருக்கு புற்றுநோயை உண்டாக்கும் மரபணுக்களைக் கணிக்கக்கூடியதாகும். இந்தக் கருவி புற்றுநோய் சிகிச்சை உத்திகளை வகுப்பதிலும் உதவும்.

---